COLOMBO STOCK EXCHANGE

# ஊடக வெளியீடு

## 2017 டிசெம்பர் 06

# பங்குச்சந்தை முதலீடு தொடர்பான இலவச செயலமர்வு

**கொழும்பு:**

பங்குச்சந்தை முதலீட்டில் ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு பங்குகளில் முதலீடு தொடர்பான இலவச செயலமர்வு ஒன்றினை எதிர்வரும் 16 ஆம் திகதி (சனிக்கிழமை) பி.ப 03.00 மணி தொடக்கம் பி.ப 05.00 மணி வரை பங்குப்பரிவர்த்தனையின் கேட்போர் கூடத்தில் நடத்த கொழும்பு பங்குப்பரிவர்த்தனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த செயலமர்வானது முதலீட்டாளர்களுக்கு தமிழ் மொழி மூலம் பங்குச்சந்தை தகவல்களையும் மற்றும் தரவுகளையும் பெற்றுக்கொள்ள ஓர் வாய்ப்பாகும்.

முதலீட்டாளர்களுக்கு பங்குச்சந்தை தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதற்காக பின்வரும் விடயங்களில் இந்த செயலமர்வில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

1. சேமிப்பும் முதலீடும்
2. பங்குச்சந்தை அறிமுகம்
3. மத்திய வைப்புத்திட்ட முறைமைகள் கணக்கினை ஆரம்பித்தல்
4. பங்குக் கொள்வனவு மற்றும் விற்பனை நடைமுறை
5. பிணையங்களின் வகைகள்
6. பங்கு முதலீட்டு நன்மைகள்
7. பங்குத்தரகர் தெரிவு
8. பங்குச்சந்தை பெறுபேற்று புள்ளிவிபரங்கள்

ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் இந்த இலவச செயலமர்வில் பங்குபற்றி பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த செயலமர்வில் பங்குபற்றுவதற்கான பதிவுகளுக்காகவும், மேலதிக விபரங்களுக்காகவும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் சந்தை அபிவிருத்திப் பிரிவு சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் (முதலீட்டாளர் கல்வி) R.M. சிவானந்தன் அவர்களை 011-235 6517/075-235 2929 இலக்கங்களினூடாக அல்லது info@cse.lk மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

**கொழும்பு பங்குப்பரிவர்த்தனை பற்றி**

இலங்கையிலுள்ள ஒரேயொரு பங்குச் சந்தையை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை இயக்குவதுடன் கம்பனிகளும் முதலீட்டாளர்களும் ஒன்றிணையக்கூடிய ஓர் வெளிப்படையான மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட சூழலை வழங்குவதற்கும் பொறுப்பாயுள்ளது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது இலங்கையின் சட்டங்களுக்கமைய ஸ்தாபிக்கப்பட்ட உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஓர் கம்பனியாகும். இந்நிறுவனம் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டுள்ளதுடன் இது 15 அங்கத்தவர்களையும் 16 வியாபார அங்கத்தகவர்களையும் உள்ளடக்கிய ஓர் பரஸ்பரமுள்ள பரிமாற்றகமாகும். அனைத்து அங்கத்தவர்கள் மற்றும் வியாபார அங்கத்தவர்கள் பங்குத்தரகர்களாகச் செயற்படுவதற்கு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டுள்ளார்கள். மேலதிகத் தகவல்களுக்கு www.cse.lk யைப் பார்க்கவும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

நிரோஷன் விஜேசுந்தர
தலைவர்
சந்தை அபிவிருத்திப் பிரிவு
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
தளம் 04, மேற்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
எச்லன் சதுக்கம்
கொழும்பு 01
இலங்கை.

தொலைபேசி : + 94 11 2356510

கையடக்கத் தொலைபேசி : + 94 777 819999

தொலைநகல் : + 94 11 2445279